யொட்டி அதிகாரிகள் நிர்ணயிக்கிறார்கள். அதில் திருப்தி அடையாதவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். அங்கே விலையை நிர்ணயித்தே தீர்ப்பு கூறிவிடுகிறார்கள்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை நகரிலுள்ள பொன்மேனி கிராமத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்படும்பொழுது சாதாரணமாக சிறிய அளவிற்கு நிலம் வைத்துக்கொண்டு ஜீவித்துக் கொண்டிருக்கும் குடும்பங்கள் பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நில ஆர்ஜிதம் செய்யும்பொழுது அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் நம்முடைய நில ஆர்ஜிதக் கொள்கை இருக்க வேண்டுமென்று அந்த மக்கள் விரும்புகிறார்கள். எனவே, அதுபற்றி அரசு ஆய்வு செய்யுமா? அடுத்து நான் கேட்க விரும்புவது, சமீபத்திலே உயர்நீதி மன்றத்திற்குச் சென்று மிக அதிகமான நஷ்டயீட்டைப் பெறும்பொழுது, நாம் நஷ்டயீட்டை நிர்ணயிக்கும்பொழுது சில நிலைமைகளை மாற்றியமைத்து புதிய சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு பொன்மேனி கிராமத்தில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு நஷ்டயீடு வழங்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணை தலைவரவர்களே, முதல் பகுதிக்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது பகுதிக்கு, உயர்நீதி மன்றம் அதிகமாகக் கொடுக்குபடி தீர்ப்பு கொடுத்து விட்டதே என்று தான் பணம் கொடுக்கிறோமே தவிர, தீர்ப்பு சரி என்று நினைத்துக் கொடுப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தீர்ப்பு வந்து விட்ட பிறகு பணம் கொடுக்கிறோம், அவ்வளவுதான்.

குண்டம்பாச்சி அணைத்திட்டம்.

*வினா எண் 217—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை—அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுகா பூம்பாறையில் குண்டம்பாச்சி அணைகட்டுவதற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அணை கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பமாகும்?

(இ) அணையின் நீரை நீர்ப்பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தும் திட்டம் உள்ளதா?

1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமத்தில் குண்டம்பாச்சி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் ஏதுமில்லை. ஆயினும் மேற்படி கிராமத்தில் குண்டம்பாச்சி ஆற்றின் குறுக்கே ரூ. 3 இலட்சத்தில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ரூ. 4.40 லட்சத்திற்கு சிறு பாசன தலைமைப் பொறியாளரால் புதுப்பிக்கப்பட்டு (up-dated) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத்திட்டம் பாசன வசதி அளிப்பதற்காகவே வகுக்கப்பட்டதாகும். குடிநீர் வழங்குவதற்கான நோக்கம் இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே இத் திட்டத்தால் பயன் அடையும் கிராமங்கள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைத் தலைவரவர்களே, இது பாசன வசதிக்காக வகுக்கப்பட்ட திட்டமாகும். ஏறக்குறைய அந்தப் பகுதியிலே உள்ள 117.83 ஏக்கர் விவசாயத்திற்குப் பயனடையக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சுகநதி கண்மாய்

*வினா எண் 218—திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் வந்தவாசி தொகுதி சுகநதியில் நாகர்மேடு கொண்டம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் நாகர்மேடு கிராமம் அருகில் சுகநதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 12,24,800 செலவில் சிறுபாசனத் தலைமைப் பொறியாளரால் வருவாய் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது ஆணையர் (நில நிர்வாகம்) அவர்களின் ஆய்வில் உள்ளது. அவரது பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதையும், எப்பொழுது முடியும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS